15-01-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 14.12.1997

வீண் மற்றும் எதிர்மறைகளை தவிர்த்து விருது அடைவதற்கு தகுதியானவர் ஆகுங்கள்.

இன்று பாப்தாதா தனது பரமாத்ம அன்பிற்கு தகுதியான ஆத்மாக்களைப் பார்த்துக் கொண்டிருக் கின்றார். பரமாத்ம அன்பானது ஆனந்த மயமான ஊஞ்சல் ஆகும். இந்த சுகமான ஊஞ்சலில் சதா ஆடிக் கொண்டே இருக்கிறீர்கள். பரமாத்ம அன்பு அநேக பிறவிகளின் துக்கங்களை ஒரு விநாடி யில் அழித்து விடுகிறது. பரமாத்ம அன்பு சர்வசக்திகளும் நிறைந்ததாகும். அது பலமற்ற ஆத்மாக் களை சக்திசாலியாக ஆக்கி விடுகிறது. இப்படிப்பட்ட சிரேஷ்ட பரமாத்ம அன்பிற்கு மிகக் குறைந்த ஆத்மாக்களாகிய நீங்கள் தகுதியானவர்களாக இருக்கிறீர்கள். இந்த சிரேஷ்ட தகுதியான ஆத்மாக் களைப் பார்த்து பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகின்றார். தந்தை எவ்வாறு மகிழ்ச்சி அடை கின்றாரோ அதே போன்று குழந்தைகளும் மகிழ்ச்சி அடைகிறீர்கள். ஆனால் வரிசைக்கிரமம். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் மனதார இந்த வரதானம் கொடுக்கின்றார் - பரமாத்ம அன்பு என்ற ஊஞ்சலில் சதா ஆடக் கூடிய அழிவற்ற இரத்தினம் ஆகுக. இந்த அன்பு என்ற ஊஞ்சலிருந்து மனம் என்ற கால்களை கீழே வைக்காதீர்கள். ஏனெனில் முழு உலக ஆத்மாக்களிலும் பரம் ஆத்மா விற்கு செல்லமானவர்கள், அன்பானவர்கள். எனவே பாப்தாதா குழந்தைகளுக்கு இந்த ஆசிர்வாதம் தான் கொடுக்கின்றார் - இந்த பரமாத்ம அன்பில் மூழ்கி இருங்கள். இவ்வாறு அன்பில் மூழ்கி யிருக்கும் ஆத்மாக்களிடம் எந்த பிரச்சனை அல்லது மாயையின் குழப்பங்கள் வர முடியாது. கீழே கால் வைப்பதால் தான் மாயாவும் விதவிதமான விளையாட்டு விளையாட வருகிறது, விதவிதமான ரூபங்களை தாரணை செய்து ஈர்க்கிறது. அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களின் சர்வ சக்திகளின் முன் மாயை கண் எடுத்தும் பார்க்க முடியாது. உங்களது மூன்றாவது கண், ஜுவாலமுகி கண் மாயாவை சக்தியற்றதாக ஆக்கி விடுகிறது. நீங்கள் அனைவரும் விசேஷ ஆத்மாக்கள், அனைத்து பிராமணர்களுக்கும் பிறப்பு எடுத்தவுடனே மூன்றாவது கண் பாப்தாதாவின் மூலம் கிடைத்திருக்கிறது. ஆனால் அவ்வபொழுது மூன்றாவது கண் கடின உழைப்பிற்கான காரியம் செய்து செய்து களைப்படைந்து விடுகிறது, களைப்பின் காரணத்தினால் மூடி விடுவதை தந்தை பார்க்கின்றார். மாயையின் பார்வையும் மிகவும் தொலை நோக்குடையதாக இருக்கிறது, தூரத்திலேயே கண்டுபிடித்து விடுகிறது. இப்பொழுது என்னுடைய இராஜ்யம் சென்றே விட்டது என்பதை மாயையும் புரிந்திருக்கிறது. ஆகையால் மாயாவைப் பார்த்து பயப்படாதீர்கள். குஷி குஷியாக, சர்வசக்திகளின் ஆதாரத்தில் அதற்கு விடை கொடுங்கள். வருவதற்கான வாய்ப்பு கொடுக்காதீர்கள், விடை கொடுங்கள். அதுவும் பிராமண ஆத்மாக்களிடம், சிரேஷ்ட ஆத்மாக்களிடம் யுத்தம் செய்து செய்து களைப்படைந்து விட்டது. நீங்கள் தனது பலவீனத்தின் காரணத்தினால் மாயாவை வரவேற்கிறீர்கள், அது களைப்படைந்து விட்டது. ஆனால் நீங்கள் வரவேற்கின்ற பொழுது அது வாய்ப்பு எடுத்துக் கொள்கிறது. இப்பொழுது சக்தியற்றதாக ஆகிவிட்டது. உங்கள் அனைவரின் அனுபவமும் என்ன சொல்கிறது? இப்பொழுது மாயையிடம் முன்பு போல சக்தி இருக்கிறதா? அதில் சக்தி இருக்கிறதா? அல்லது நீங்கள் சக்திசாலிகளாக இருக்கிறீர்களா? அது

சோதித்துப் பார்க்கும். ஏனெனில் நீங்கள் வரவேற்கும் போது அது ஏன் வாய்ப்பு கொடுக் காமல் இருக்கும். ஏன் பலவீனமாக ஆகிறீர்கள்? தந்தைக்கு இந்த கேள்வி இருக்கிறது - மாஸ்டர் சர்வ சக்திவான்களாக இருக்கிறீர்களா இல்லையா? அனைவரும் மாஸ்டர் சர்வசக்திவான்களாக இருக்கிறீர்களா? அவ்வப் பொழுது சர்வசக்திவான்களாக இருக்கிறீர்களா? அல்லது சதா சர்வசக்தி வான்களாக இருக்கிறீர்களா? எப்படி இருக்கிறீர்கள்? சதா சக்திசாலிகளாக இருக்கிறீர்களா? இப்போது சென்று விடு என்று மாயாவிடம் கூறிவிட முடியுமா? நீங்கள் அதை அழைக்கக் கூடாது. தந்தை மாயாவிடம் இப்போது முடித்து விடு என்று கூறுகின்றார். ஆனால் என்னை அழைக்கிறார்கள் என்று மாயை தந்தையிடம் கூறுகிறது. பிறகு தந்தை என்ன செய்வார்? ஏதாவது ஒரு பலவீனம் மனதில், வார்த்தையில், சம்பந்தம்-தொடர்பில் வருகிறது எனில் புரிந்து கொள்ளுங்கள் மாயாவை அழைத்திருக்கிறேன். அதற்கும் வரவேற்கும் அதிர்வலைகள் (வைபிரேசன்) விரைவாக சென்ற டைந்து விடுகிறது.

இந்த மகா உற்சவம் மிக நன்றாக கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் உற்சாகம் சதா இருக்க வேண்டும் என்பதற்காக உற்சவம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த ஆண்டு அதிக உற்சவம் கொண்டாடுகிறீர்கள் அல்லவா? (இந்த குழுவில் ஈஸ்வரிய சேவையின் ஆதி இரத்தின சகோதரர்களுக்கு கௌர விக்கும் மற்றும் டீச்சர் சகோதரிகளின் வெள்ளி விழா நிகழ்ச்சி வைக்கப்பட்டிருக்கிறது) இந்த குழுவில் உற்சவம் கொண்டாடுகிறீர்கள் எனில் இந்த ஆண்டு உற்சவம் கொண்டாட வேண்டும் அதாவது மாயாவிற்கு விடை கொடுக்க வேண்டும் என்று தந்தை நினைக்கின்றார். தங்க ஜிகினா மாலை அணிந்து அமர்ந்து விடக் கூடாது, தங்க ஜிகினா மாலை அணிவது என்றால் தங்க யுகத்தினர்களாக ஆவதாகும். காட்சி மிகவும் அற்புதமாக இருக்கிறது, ஆனால் சதா தங்க ஸ்திதிக்கான ஜிகினா அணிய வேண்டும் அல்லது துப்பட்டா அணிந்திருக்க வேண்டும். துப்பட்டா எடுத்ததும் உற்சவமும் முடிந்து விட்டது, எப்படி இருந்தோமா அப்படியே ஆகிவிட்டோம் என்று இருக்கக் கூடாது. இது உற்சாகம் கொண்டாடக் கூடிய விழா ஆகும். ஆக யாரெல்லாம் உற்சவம் கொண்டாடினீர்கள் அல்லது கொண்டாட வந்திருக்கிறீர்கள் அவர்கள் கை உயர்த்துங்கள். பாப்தாதா குஷியடை கின்றார். நன்றாக கொண்டாடுங்கள், ஆனால் கொண்டாடுவது என்றால் ஆவது மற்றும் ஆக்குவதாகும். உற்சவம் கொண்டாடும் நேரத்தில் கவனம் செலுத்த வேண்டிய விசயம் என்னவென்றால் சதா நினைவு மற்றும் சேவையின் உற்சாகத்தில் இருக்கக் கூடிய ஆத்மா நான். பாப்தாதாவிற்கு காட்சி மிகவும் பிடித்திருக்கிறது. ஆக இந்த ஆண்டு மாயா விற்கு விடை கொடுக்கும் ஆண்டாக கொண்டாட பாப்தாதா விரும்புகின்றார். இவ்வாறு உற்சவம் கொண்டாடு வீர்கள் தானே? நாளை யார் கொண்டாடுவீர்களோ, அவர்களும் இவ்வாறே கொண்டாடு வீர்கள் தானே? வெள்ளி விழா கொண்டாடுவீர்கள் தானே? கோல்டன் ஜுப்ளியோ, வெள்ளி ஜுப்ளியோ ஆனால் அது உற்சவம் தானே! நாம் வெள்ளி ஜுப்ளி கொண்டாடுபவர்கள், முதலில் கோல்டன் ஜுப்ளி கொண்டாடுபவர்கள் ஆகட்டும் என்று நினைக்கக் கூடாது. மேலும் விழா கொண்டாடுபவர்களுக்குத் தான் பாப்தாதா கூறிக் கொண்டிருக்கின்றார் என்று யார் கொண்டாடவில்லையோ அவர்களும் இவ்வாறு நினைக்கக் கூடாது. அனைவருக்காகவும் கூறிக் கொண்டிருக்கின்றார். பிராமண வாழ்க்கையில் உற்சவம் கொண்டாடி விட்டீர்கள் அல்லவா! அனைவரும் பிராமணர்களாக ஆகிவிட்டீர்களா? அல்லது

பிராமணர்களாகவும் ஆகிக் கொண்டிருக் கிறீர்களா? ஆகிவிட்டீர்கள். ஆக பிராமண வாழ்க்கையில் உற்சவம் கொண்டாடும் ஆத்மாக்கள் என்றால் சதா உற்சாகத்தில் இருக்க வேண்டும், மற்றவர் களையும் உற்சாகத்தில் கொண்டு வர வேண்டும். இது தான் பிராமணர்களின் தொழில் ஆகும். அந்த பிராமணர்கள் வாயினால் கதை கூறுகின்றனர். பிராமணர்களாகிய நீங்கள் வாயினால் பேசுகிறீர்கள் எனில் உற்சாகம் கொடுப்பதற் காக பேசுகிறீர்கள். எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும், உங்களது விரோதி ஆத்மாவாக இருக்கட்டும், ஏனெனில் கணக்கு-வழக்கு இங்கேயே முடிக்க வேண்டும். எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் பிராமணர்களின் கடமை உற்சாகம் நிறைந்த கதை கூறுவதாகும், உற்சாகத்தின் விசயங்களைக் கூற வேண்டும். அவர்கள் அழுது கொண்டிருப்பார்கள், நீங்கள் அவர்களை ஆர்வத்தில் நடனமாட வையுங்கள். மனதில் ஆர்வம் இருக்கும் பொழுது என்ன செய்வார்கள்? கால் நடனம் ஆட ஆரம்பித்து விடும். இந்த விழா போல! கடைசியில் என்ன செய்வீர்கள்? அனைவரும் நடனம் ஆடுவீர்கள் அல்லவா! இது கால்களில் நடனம் ஆடுவதாகும். பிராமண ஆத்மா உற்சாகம் கொடுக்காமல் மற்றும் உற்சாகமின்றி இருக்கவே முடியாது. உற்சாகத்தை குறைக்கும் விசயங்கள் நடக்கும் மற்றும் இருக்கும். ஆனால் பாப்தாதா இந்த ஆண்டு அனைத்து குழந்தைகளிடமும் இந்த சுப ஆசை வைக்கின்றார் - கடந்தது கடந்தவையாக இருக்கட்டும், இன்று வரை எப்படிப்பட்ட ஆத்மா உங்களது சம்பந்தம்- தொடர்பில் வந்திருந்தாலும், எதிர்மறையானவர்களாக இருந்தாலும், எதிர்க்கக் கூடியவர்களாக இருந்தாலும், பிராமண வாழ்க்கையை அசைக்கக் கூடியவர்களாக இருந்தாலும் இந்த ஆண்டு எதிர்மறை மற்றும் வீணான கண்ணோட்டத்தை அழித்து விடுங்கள். அன்பு கொடுங்கள், சக்தி கொடுங்கள். அன்பு கொடுக்க முடியவில்லை, சக்தி கொடுக்க முடிய வில்லை எனில் பார்த்தாலும்-கேட்டாலும், தொடர்பில் வந்தாலும் வீணான மற்றும் எதிர் மறையான விசயங்களை மனதில் தாரணை செய்வதை தவிர்த்து விடுங்கள். மனம் மற்றும் புத்தியில் தாரணை ஆகக் கூடாது, தவிர்த்து விடுங்கள். மாற்றி விடுங்கள். எதிர்மறையானதை அல்லது வீணானவைகளை மாற்றி விட்டு மனதில் கொண்டு செல்லுங்கள். இவ்வாறு இரண்டு விசயங்களையும் யார் தவிர்க்கிறார்களோ, அவர்களுக்கு பாப்தாதாவின் மூலம், பிராமணக் குடும்பத்தின் மூலம் மிக நல்ல, மிகப் பெரிய பரிசு கிடைக்கும். மற்ற ஆத்மாக்களுக்கு பரிசு கொடுப்பவர்கள் ஆத்மாக்களாக இருப்பர். பரிசு கிடைக்கிறது அல்லவா! இது பரமாத்மாவின் பரிசாகும். தவிர்த்து விடுங்கள், பரிசு பெறுங்கள். தைரியம் இருக்கிறதா? நல்லது.

பாண்டவர் களில் யாரெல்லாம் விழா கொண்டாடி இருக்கிறீர்களோ அவர்களுக்கு தைரியம் இருக்கிறதா? பரிசு பெறுவீர்களா? அனைவரும் கை உயர்த்தியிருக்கிறீர்கள். இன்றைய நாளை நினைவில் வைத்துக் கொள்ளுங் கள். இன்று எந்த நாள்? (14 நவம்பர்) ஆக ஒவ்வொரு மாதமும் 14 ஆம் நாள் தன்னை பரிசோதியுங்கள். நல்லது. வெள்ளி விழா கொண்டாடுபவர்களில் பரிசு பெறுவேன் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். பெயரளவிற்கு கை உயர்த்தக் கூடாது. வெட்கப்பட்டு கை உயர்த்தக் கூடாது. பாப்தாதா வாய்ப்பு கொடுக்கின்றார். ஒருவேளை யாரிட மாவது தைரியம் இல்லையெனில் கை உயர்த்தாதீர்கள், பரவாயில்லை. பாப்தாதா இன்னும் அதிக சக்திகளை கொடுப்பார். இன்னும் சிறிது தைரியம் தேவை என்று யாராவது நினைக்கிறீர்களா? வெள்ளி விழா கொண்டாடும் டீச்சர்ஸ் யாராவது

இருக்கிறீர்களா? இங்கு கை உயர்த்த வெட்கப் பட்டால் எழுதிக் கொடுங்கள். விழா கொண்டாடும் போது கொடுங்கள். அதிக தைரியம் தேவை என்று நினைப்பவர்களுக்கு விசேஷ தனிப்பட்ட போதனை (டியுசன்) வைக்கப்படும். படிப்பில் பலவீனமாக இருப்பவர்களை என்ன செய்வார்கள்? டியுசன் ஏற்பாடு செய்வார்கள் அல்லவா? மதுவனத்தில் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். எழுந்து நில்லுங்கள். மதுவனத் தில் உள்ளவர்கள் வாய்ப்பை நன்றாக எடுத்துக் கொள்கின்றனர். நல்லது. மதுவனத்தில் உள்ளவர்கள் பரிசு பெறுவீர் களா? அனைவரும் உயர்த்தவில்லை? டியுசன் வேண்டாமா? புத்திசாலிகளாக இருக்கிறீர்கள். நல்லது. பாப்தாதா கணக்கு பார்ப்பார். மதுவனத்தில் உள்ளவர்களுக்கு வாழ்த்துக்கள்.

ஆக இந்த ஆண்டு விடை கொடுப்பது மற்றும் வாழ்த்துக்கான ஆண்டாகும். மேலும் இந்த ஆண்டு விசேஷமாக எந்தக் குழந்தைகள் சங்கல்பம் செய்தீர்களோ, அதை நடைமுறையில் செய்யக் கூடியவர்களுக்கு பாப்தாதாவின் எக்ஸ்ட்ரா உதவி கிடைக்கும். திடமாக இருந்தாலும் போதும். இடை இடையில் நாடகம் சோதனை கொடுக்கும். ஆனால் சங்கல்பத்தில் திடமாக இருக்க வேண்டும், சங்கல்பம் என்ற கால் அசையவே கூடாது, உறுதியாக இருக்கும் போது பாப்தாதாவின் மூலம் எக்ஸ்ட்ரா உதவி அனுபவமாகும். பெறுவதற்கான சக்தி வேண்டும். ஒரே பலம், ஒரே நம்பிக்கை எது நடந்தாலும், ஆகியே தீர வேண்டும். இந்த சங்கல்பம் என்ற கால் உறுதியாக இருக்க வேண்டும். விசயங்கள் வரத் தான் செய்யும், விமானத்தில் செல்லும் போது மேகங்கள் கீழே சென்று விடும், நீங்கள் மேலே மேலே இருப்பீர்கள். மேகங்கள் ஒரு மன மகிழ்ச்சிக்கான காட்சியாக மாறி விடும். அதே போன்று கருப்பு மேகங்கள் போன்று எவ்வளவு விசயங்கள் வந்தாலும், அதில் பிரச்சனைக்கான தீர்வு அல்லது சமாதானம் அந்த நேரத்தில் தென்படாமல் இருக்கலாம். ஆனால் இந்த திட நிச்சயம் இருக்க வேண்டும் - இந்த மேகம் கலைந்து விடுவதற்காகத் தான் வந்திருக் கிறது. இந்த மேகங்கள் கலைந்து போய் விடும், நின்று விடாது. இவ்வாறு பறக்கும் கலையின் நிலையில் நிலைத்து விட்டால் எவ்வளவு ஆழமாக கருப்பு மேகங்களும் கலைந்து விடும், மேலும் நீங்கள் திட தன்மையின் பலத்தின் மூலம் வெற்றி அடைந்து விடுவீர்கள். இது எப்படி நடக்கும் என்று பயப்படாதீர்கள். நல்லதாகவே நடக்கும். ஏனெனில் பாப்தாதா அறிவார் - நேரம் எவ்வளவு நெருக்கத்தில் வந்து கொண்டிருக்கிறதோ, அவ்வளவு புதுப்புது விசயங்கள், சன்ஸ்காரங்கள், கணக்கு-வழக்குகள் என்ற கருப்பு மேகங்கள் வரும். இங்கேயே அனைத்தும் முடிக்க வேண்டும். நாளுக்கு நாள் இப்படிப்பட்ட விசயங்கள் ஏன் அதிகரிக்கின்றன? என்று சில குழந்தைகள் கேட்கின்றனர். எந்தக் குழந்தைகள் தர்மராஜபுரியை கடக்கக் கூடாதோ, அவர்கள் சங்கமத்தில் இந்த கடைசி நேரத்தில் சுபாவ- சன்ஸ்காரத்தின் அனைத்து கணக்கு-வழக்குகள் இங்கேயே முடிக்க வேண்டும். தர்மராஜபுரிக்கு செல்லக் கூடாது. உங்கள் முன் எமதூதர்கள் வரமாட்டார்கள். இந்த விசயங்கள் (பிரச்சனைகள்) தான் எமதூதர்கள், அதை இங்கேயே முடித்து விட வேண்டும். ஆகையால் வியாதி வெளிப்படுகிறது எனில் அது முடிவடைகிறது என்பதன் அடையாளமாகும். நேரம் நெருக்கத்தில் இருக்கிறது, ஆனால் இன்னும் வீண் சங்கல்பம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்று நினைக்காதீர்கள். ஆனால் இது முடிப்பதற்காகத் தான் வெளியேறிக் கொண்டி ருக்கிறது. அதன் வேலை வருவது, உங்களது வேலை

பறக்கும் கலையின் மூலம், சக்தியின் மூலம் பரிவர்தனை செய்வ தாகும். பயப்படாதீர்கள். சில குழந்தைகளின் விசேஷதா என்னவெனில் பயப்படுவது வெளியில் தென்படுவது கிடையாது, ஆனால் மனதிற்குள் பயப்படுகின்றனர். வெளியில் இல்லை, இல்லை, ஒன்றுமில்லை என்று கூறுவர், இது நடக்கவே செய்யும். ஆனால் உள்ளுக்குள் அதன் பாதிப்பு இருக்கும். எனவே பாப்தாதா முன் கூட்டியே கூறிவிடுகின்றார் - பயப்படுத்தும் விசயங்கள் வரும், ஆனால் நீங்கள் பயப்படாதீர்கள். தனது ஆயுதங்களை விட்டு விடாதீர்கள். பயப்படும் போது கையிலுள்ள பொருள் கீழே விழுந்து விடும். ஆக மனதில் பயப்படும் போது ஆயுதம் அல்லது சக்திகள் கீழே விழுந்து விடுகிறது, மெர்ஜ் ஆகி விடுகிறது. ஆகையால் பயப்படாதீர்கள், முன் கூட்டியே அறிந்திருக்கிறீர்கள். திரிகாலதர்சி ஆகுங்கள், பயமற்றவர் ஆகுங்கள். பிராமணர்கள் தங்களது சம்பந்தங்களில் பயமற்றவர்களாக ஆகக் கூடாது, மாயாவிடம் பயமற்றவர்களாக ஆகுங்கள். சம்பந்தங்களில் அன்பு மற்றும் பணிவு. ஒருவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் நீங்கள் உள்ளப்பூர்வமாக அன்பு செலுத்துங்கள், சுப பாவனை வையுங்கள், கருணை காட்டுங்கள். பணிவானராகி அவரை முன்நிறுத்தி முன்னேற்றுங்கள். அதைத் தான் காரணம் என்ற எதிர்மறையை சமாதானம் என்ற நேர்மறையாக மாற்றுங்கள். இந்த காரணம், இந்த காரணம், இந்த காரணம் காரணம் அல்லது பிரச்சனையை நேர்மறையான சமாதானமாக ஆக்குங்கள்.

ஒரு விசயத்தில் அவ்வப்பொழுது பாப்தாதாவிற்கு சிரிப்பு வருகிறது. எந்த விசயம் என்று தெரியுமா? அறிவீர்களா? ஒருபுறம் பாபா, நான் இயற்கையை வென்றவனாக ஆவேன், இயற்கையையும் மாற்றுவேன் என்று சவால் விடுகிறீர்கள். இவ்வாறு கூறுகிறீர்கள் தானே? இயற்கையை மாற்றுவீர்கள் தானே? இவ்வாறு சவால் விடுபவர்கள் இயற்கையை மாற்றி விட முடியும். ஆனால் சம்பந்தம்-தொடர்பில் ஏதாவது விசயம் வருகிறது எனில் அதை சமாதானம் செய்ய முடிவது கிடையாது, பரிவர்தனை செய்ய முடிவது கிடையாது. சிரிப்பிற்கான விசயம் அல்லவா - இயற்கை என்பது ஜடம், அதற்கு சவால் விடுகிறீர்கள். ஆனால் பிராமண ஆத்மாக்களை பரிவர்தனை செய்வது இயலாததாக இருக்கிறது. பிறகு என்ன யோசிக்கிறீர்கள்? அது இயலாத காரியமாகும், இது நடக்கவே நடக்காது. நடக்கவே நடக்காது, மாற்றவே முடியாது. பிறகு இயற்கையை எப்படி மாற்றுவீர்கள்? தன்னை மாற்றி மற்றவர்களை மாற்றுங்கள். அவர்கள் தவறாக இருக்கலாம், 100 சதவிகிதம் தவறாக இருக்கலாம். ஆனால் உங்களது உறுதிமொழி என்ன? தந்தையிடம் என்ன உறுதிமொழி செய்திருக் கிறீர்கள்? சுய மாற்றத்தின் மூலம் உலகை மாற்றுவோம், இந்த உறுதிமொழி செய்திருக்கிறீர்களா? அல்லது மறந்து விட்டீர்களா? ஆம் என்று அனைவரும் கூறுகிறீர்கள். விசயங்கள் எப்படி வேண்டுமென்றாலும் இருக்கட்டும், விசயங்களை மாற்றுவதற்கு உதவியையும் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் இவர்கள் மாறுவது மிகவும் கடினம் என்ற சான்றிதழ் கொடுக்காதீர்கள். சான்றிதழ் கொடுப்பதற்கு உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? இது நடக்கவே நடக்காது, இது சரியாகவே ஆகாது என்று யோசிப்பது, யார் உங்களை நீதிபதி ஆக்கியது? அப்படி நீதிபதி என்ற இருக்கையில் அமர்ந்து விடுகிறீர்களா? அல்லது வக்கீலாக ஆகிறீர்கள், அதிக சட்டங்களை கூறுகிறீர்கள், இவ்வாறு கிடையாது, இவ்வாறு என்று வாதாடு கிறீர்கள். வக்கீல் ஆகாதீர்கள், நீதிபதி யாகவும் ஆகாதீர்கள். இந்த அதிகாரம் பாப்தாதா கொடுக்க வில்லை. நிமித்தமாக இருக்கிறார்கள் எனில் அவர்களது

உதவியை பெற்றுக் கொள்ளுங்கள். அந்த நிமித்த ஆத்மாக்களும் பாப்தாதாவின் வழிப்படி தான் செய்கின்றனர். தனது மன வழிப்படி நடப்பது கிடையாது.

ஆக இந்த ஆண்டு இது போன்ற அனைத்து விசயங்களையும் சமாப்தி செய்யுங்கள், அதாவது மனதில் மாற்றம் கொண்டு வாருங்கள், தவிர்த்து விடுங்கள், மேலே கொண்டு செல்லுங்கள், பொறுப்பு முடிந்து விட்டது. உங்களால் மாற்ற முடியவில்லை எனில் நிமித்த ஆத்மாக்கள் வரை கொண்டு செல்வது உங்களது கடமை. பிறகு சட்டத்தை கையில் எடுத்துக் கொள்ளாதீர்கள். அப்போது தான் பரிசு பெறுவதற்கு தகுதியானவர்களாக ஆவீர்கள். ஆக சதா உற்சாகத்துடன் இருங்கள், மேலும் உற்சாகத்தை அதிகப்படுத்துங்கள். இந்த நினைவைத் தான் பாப்தாதா வெளிப் படுத்திக் கொண்டிருக்கின்றார். சுயம் உற்சாகத்துடன் இருக்கும் போது அனைவருடனும் கைகோர்த்து அதாவது மனதில் அன்பு என்ற கை மீது கை வைத்து நடனமாடுவீர்கள், குஷியாக இருப்பீர்கள். ஸ்தூல கைகளினால் அல்ல, மனதில் அன்பின் சகயோகத்தின் கை. இதைத் தான் கைகோர்ப்பது என்று கூறப்படுகிறது. அன்பினால் என்ன செய்ய முடியாது! மேலும் இது பரமாத்ம அன்பு, என்ன செய்ய முடியாது! பிராமண அகராதியில் முடியாது என்பதே கிடையாது. உற்சாகமுடையவர்கள் ஒருபோதும் எந்த விசயத்திலும் நிராசை, மனம் உடைந்து விடமாட்டார். நல்லது.

நாலாபுறமும் பரமாத்ம அன்பின் சுகமான, ஆனந்த மயமான ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கும் அதிஷ்டசாலி மற்றும் அன்பான ஆத்மாக்களுக்கு, சதா திட சங்கல்பத்தின் மூலம் சமாதான சொரூபமாக இருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பரமாத்ம பரிசு பெறுவதற்கு தகுதியான ஹீரோ நடிகர்களுக்கு, சதா பாப்தாதாவின் பாலனைக்கு கைமாறு கொடுக்கக் கூடிய தந்தையின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் பலமடங்கு, கோடிகளை விட அதிகமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

வரதானம் : தூய்மை என்ற ராயல்டி மூலம் சிரேஷ்ட வாழ்க்கையின் ஜொலிப்பை காண்பிக்கும் விசேஷதா நிறைந்தவர் ஆகுக.

பிராமண வாழ்க்கையின் விசேஷதா தூய்மையின் ராயல்டி ஆகும். இராயல் குடும்பத்தினரின் முகம் மற்றும் நடத்தையின் மூலம் இவர் ராயல் குலத்தைச் சார்ந்தவர் என்பது தெரிந்து விடும். அதே போன்று பிராமண வாழ்க்கையும் தூய்மையின் ஜொலிப்பை வைத்து கண்டறிய முடியும். சங்கல்பத்திலும் அசுத்தத்தின் பெயர், அடையாளம் இல்லாத போது தான் தூய்மையின் ஜொலிப்பு நடத்தை மற்றும் முகத்தில் தென்படும். தூய்மை என்றால் பிரம்மச்சரியம் மட்டுமல்ல, எந்த ஒரு விகாரமும் அதாவது அசுத்தத்தின் பாதிப்பும் இருக்கக் கூடாது. அப்போது தான் விசேஷதா நிறைந்த பிராமண ஆத்மா என்று கூற முடியும்.

சுலோகன்: யார் சுய தரிசனம் செய்கிறார்களோ அவர்களே சதா மகிழ்ச்சியாக, அனைத்து பிராப்திகளுக்கும் அதிகாரிகளாக இருக்கிறார்கள்.

அவ்யக்த அமைதியின் மூலம் டபுள் லைட் பரிஸ்தா ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

சாகாரத்தில் ஒரு ஆடையை நீக்கி வேறு ஒரு ஆடையை அணிந்து கொள்கிறீர்கள். அதுபோன்று சாகார சொரூபத்தின் நினைவை விட்டு ஆகாரி பரிஸ்தா சொரூப் ஆகிவிடுங்கள். பரிஸ்தா விற்கான ஆடையை விநாடியில் தாரணை செய்யுங்கள். இந்தப் பயிற்சி நீண்ட காலம் இருக்கும் போது தான் கடைசி நேரத்தில் தேர்ச்சி பெற முடியும்.